1992 மார்ச் 26]

செய்கிற போது அந்தத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது. ஆகவே, இதுபோன்ற நிலைமை இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். திருநாவுக்கரசு

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரக் கடத்தல் செய்யும் வீரப்பனைப் பிடிப்பதற்கு ஒரு தனியார் துப்பறியும் நிறுவனம் முன்வந்து, அரசு அனுமதியும், உதவியும் செய்தால் ஒரு மாத காலத்திலே பிடித்துத் தருகிறோம் என்று அரசுக்கு ஏதாவது கடிதம் எழுதியுள்ளதா? அதுபோல் அரசின் உதவியுடன் வீரப்பனைப் பிடிப்பதற்கு அந்தத் தனியார் துப்பறியும் நிறுவனத்திற்கு அரசு அனுமதி ஏதும் வழங்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற கடிதம் எதுவும் அரசுக்கு வரவில்லை. நம்முடைய தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நேற்றைய முன்தினம் கூட உரையாற்றுகின்ற நேரத்தில் குறிப்பிட்டார்கள். அவர் வேறு மாநிலத்திலே இருக்கின்ற காரணத்தினாலே உடனே அவரைக் கைது செய்ய முடியவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆகவே இதுபோன்ற கருத்துக்கள் அரசுக்கு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 364. திருமதி என்.சி. கனகவல்லி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்,

364—

விளாத்திகுளம் தொகுதியில் கூட்டுறவு முறையில் நூற்பாலைகள்.

*4937 திருமதி என்.சி. கனகவல்லி: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விளாத்திகுளம் தொகுதியில் நெசவாளர்கள் அதிகம் வாழ்வதாலும் பருத்தி அதிகமாக விளைவதாலும் நூற்பாலைகள் இல்லாததாலும் கூட்டுறவு முறையில் நூற்பாலைகள் ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விளாத்திக்குளம் தொகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

திருமதி என். சி. கனகவல்லி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதியிலும் என்னுடைய சிதம்பரனார் மாவட்டத்திலும், அதிகமாக பருத்தி உற்பத்தியாவதால் அப்பருத்தியை வெளி மாநிலங்களுக்கும், இதர மாவட்டங்களுக்கும் அனுப்புவதால் என்னுடைய சொந்த மாவட்டத்திலேயே தொழில் வசதி பெருகவோ, வேலை வாய்ப்பு கிடைக்கவோ அதிக வாய்ப்பு இல்லை. அதனால் அரசு கனிவோடு பரிசீலித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அரசிலாவது எங்கள் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் மூலம் நூற்பாலைகள் அமைத்து வேலை வாய்ப்பு கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், பேட்டையில் கூட்டுறவு நூற்பாலை 50,000 கதிர்களுடனும், எட்டயபுரத்தில் பாரதி நூற்பாலை 12,500 கதிர்களுடனும்செயல் பட்டு வருகின்றன. தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக 5 இலட்சம் பேல்கள் பஞ்சு தான் உற்பத்தி ஆகின்றன. மீதம் தேவைப்படுகின்ற 20 இலட்சம் பேல்களை இதர மாநிலங்களிலிருந்து பெற்று வருகிறோம். ஆதலால் தற்போது இருக்கிற இரண்டு நூற்பாலைகள் திருநெல்வேலி மாவட்டத்திலும், மீதம் 16 நூற்பாலைகள் இதர மாவட்டங்களிலும் சுமார் 16,000 பேல்கள் முதல் 18,000 பேல்கள் வரை சிட்டாநூல் மற்றும் கோன்நூல் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றன. தற்போது உற்பத்தியாகும் நூல் அளவே உபரியாக இருப்பதால் இந்தக் கேள்விக்கு இடமில்லை என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 365—திரு. சோ. இராசாராமன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

365—

குப்பை மூலம் மின்சாரம் தயாரித்தல்.

*114. திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் குப்பை மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்றை அரசுக்கு திருச்சி பெல் நிறுவனம் தந்துள்ளதா?